**23.7.83**

1983 ஜூன் மாதம் இலங்கையில் அரச பயங்கரவாதம் வெறி பிடித்தாடியது. கண்ட இடத்தில் யாரையும் சுட்டுத்தள்ளும் அதிகாரம் வழங்கப்பட்ட நிலையில் சிங்கள ஆயுதப்படையினர் வவுனியாவிலும் திருகோணமலையிலும வெறியாட்டம் நடத்தினர். தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த இப்பிரதேசங்களில் சிங்களவரைப் பெரும்பான்மையினராக்க சிங்கள அரசு பெரும்முயற்சி செய்து வந்தது. வவுனியா நகரை ஆயுதப்படைகள் தீயிட்டு எரித்தன; பல தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். திருகோணமலையில் சிங்களக் காடையர்கள் கூட்டம் இராணுவத்தினதும் கடற்படையினதும் ஆதரவுடன் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைத்தல் ஆகிய நடவடிக்கையில் வெறித்தனமாக ஈடுபட்டனர். திருகோணமலையில் தமிழ் மக்கள் மிலேச்சத்தனமாகப் படுகொலை செய்யப்பட்டனர்; நூற்றுக்கணக்கான வீடுகள் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன; தமிழ்க் கோயில்கள் தரைமட்டமாக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் ஆயுதப்படையினர் இளைஞர்களைச் சுற்றி வளைத்துச் சுட்டுக்

## திருநெல்வேலி – 13 இராணுவத்தினர் சுட்டுக் கொல்லப்பட்டனர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கொன்றனர்; வீடுகள் கொள்ளையிடப்பட்டன; கடைகள் எரிந்து சாம்பலாயின. தமிழ் மக்களைப் படுகொலை செய்து தமிழினத்தையே துவம்சம் செய்யும் அரசின் நாசகாரப் படுகொலைத் திட்டம் செயற்பட ஆரம்பித்து விட்டது. "தமிழர்களின் உயிரைப் பற்றியோ, தமிழர்கள் எங்களைப்பற்றி என்ன நினைக்கிருர்கள் என்பதைப்பற்றியோ எனக்கு எந்தவிதமான அக்கறையுமில்லை" என்று பிரிட்டிஷ் பத்திரிகை நிருபருக்கு ஜே.ஆர். ஜயவர்த்தஞ அளித்த பேட்டியில் தெரிவித்த கருத்தானது தமிழர்களை அழித்தொழிக்கும் திட்டத்தில் அரசு தீவிரமாக ஈடுபட்டிருப்பதையே நிரூபணம் செய்தது.

இவ்வாறு சிங்கள இனவாத அரசு தமிழ்மக்கள் மீது கண்மூடித்தனமான வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டது. எமது மக்கள் கொடூர இராணுவ ஒடுக்குமுறைக்கு இலக்காகி அழிக்கப்பட்டபோதுதான் இராணுவத்திற்குப் பதிலடி கொடுக்க நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். அதேவேளை 1983 ஜுலை 15ம் திகதி இராணுவக் கூலிகளால் கொல்லப்பட்டு வீரமரணம் அடைந்த விடுதலைப்புலிகளின் தலைசிறந்த இராணுவத் தலைவர்களில் ஒருவரான லெப்டினன்ட் லூக்காஸ் சார்ல்ஸ் அன்ரனி (சீலன்)யின் ஈடுசெய்ய முடியாத இழப்பிற்குப் பதிலடி கொடுப்பதற்காகவும் இத்தாக்குதலை நாம் திட்டமிட்டோம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஜுலை 23ம் திகதி நள்ளிரவு. திருநெல்வேலியிலுள்ள பலாலி வீதியில் லெப்டினன்ட் செல்லக்கிளி (அம்மான்)யின் தலைமையில் விடுதலைப்புலிகளின் தாக்குதற்படைப் பிரிவு இராணுவத்திற்கெதிரான திடீர்த் தாக்குதலுக்காகக் காத்து நின்றது. யுத்த சீருடையுடன், நவீனரக ஆயுதங்களுடன் 14 கெரில்லா வீரர்களை உள்ளடக்கிய தாக்குதல் பிரிவு தயார் நிலையில் நின்று கொண்டிருந்தது. பாதையில் நிலக்கண்ணிகளைப் புதைத்துவிட்டு, பாதையின் இரு பக்கங்களிலும் எமது வீரர்கள் ஆயுத பாணியினராய் நின்றனர். நள்ளிரவின் போது சிங்கள இராணுவ ரோந்துப் படைப் பிரிவு அந்த இடத்தைக் கடந்து செல்வது குறித்து எமது உளவுத் தகவற் பிரிவிடமிருந்து ஏற்கெனவே தகவல் கிடைத்திருந்தது.

எதிர்பார்த்தது போல மாதகல் முகாமைச் சேர்ந்த பதினைந்து இராணுவத்தினர் ட்ரக் வண்டியிலும் ஜீப்பிலுமாக எமது கெரில்லா வீரர்கள் காத்து நிற்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தனர். குறிக்கப்பட்ட இடத்தை ஜீப் வண்டி தாண்டியதும் திட்டமிட்டிருந்தவாறு நிலக்கண்ணி பயங்கரமாக வெடித்தது. ஜீப் வண்டி தூளாகிச் சிதறியது. பின்னல்


1


2


3




5


6



7



8



9



10



11



12



13

வந்து கொண்டிருந்த ட்ரக் வண்டி சடுதியாக நின்றது. பீதியிலும் பயத்திலும் இராணுவப் படையினர் ட்ரக் வண்டியிலிருந்து குதித்துத் தப்பி ஓட முயல்கையில் எமது கெரில்லா வீரர்களின் இயந்திரத் துப்பாக்கிகள் தீயுமிழ ஆரம்பித்தன. அதிர்ச்சியிலும் திகிலிலும் அச்சத்திலும் நின்ற இராணுவப் படையினரால் எமது வீரர்களுடன் தாக்குப்பிடித்து நின்று சண்டையிட முடியவில்லை. ஒருவர் பின் ஒருவராக அவர்கள் எமது வீரர்களின் இயந்திரத் துப்பாக்கிகளுக்கு இரையாகினர். இராணுவப் படையினரில் சிலர் வாகனத்திலிருந்து குதித்து இறங்கி, ட்ரக் வண்டியின் கீழ் ஒளித்து நின்று தாறுமாறாக எல்லாத் திசைகளையும் நோக்கிச் சுட ஆரம்பித்தனர். ஆனால் எமது இயக்க வீரர்கள் தொடர்ந்து சுட்டுக்கொண்டும் கைக்குண்டுகளை எறிந்தும் நடத்திய துணிச்சல் மிக்க தாக்குதல் எதிரிகளின் துப்பாக்கிகளை வாயடைக்கச் செய்தது.

இராணுவரீதியில் மிகவும் கச்சிதமாகவும் நிதானத்துடனும் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கெரில்லாத் தாக்குதலில் பதின்மூன்று சிங்கள இராணுவப்படையினர் கொல்லப்பட்டதுடன் இரண்டு பேர் படுகாயமுற்றனர். “Four Four Bravo” என்று ஆங்கிலக் குறியீட்டால் அழைக்கப்பட்ட இந்தச் சிங்கள இராணுவ ரோந்துப் படையின் கதை இத்தோடு முடிந்தது. விடுதலைப்புலிகளின் தரப்பில் லெப்டினன்ட் செல்லக்கிளி இந்தப் போராட்டத்தில் வீர மரணமடைந்தார்.

இத்தாக்குதலில் இறந்த சிங்கள இராணுவப் படையினரின் பெயர் விவரம் பின் வருமாறு,

1. 2ம் லெப்டினன்ட் வாஸ் குணவர்த்தன
2. பிரைவேட் எச்.ஜி. ராஜதிலக்க
3. பிரைவேட் கே.பி. கருணாரட்ன
4. கோப்ரல் ஜி.ஆர். பெரேரா
5. பிரைவேட் என்.ஏ.எஸ். மனதுங்க
6. சார்ஜன் எ.ஐ. திலகரட்ன
7. கோப்ரல் ஜி.டி. பெரேரா
8. பிரைவேட் ஏ.ஜே. விஜேசிரி
9. பிரைவேட் எஸ்.எஸ். அமரசிங்க
10. பிரைவேட் டி.என்.ஏ.டி. மனம்பிட்டிய

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

11. பிரைவேட் எம்.டி. சுனில்

12. பிரைவேட் ஜி. ரொபர்ட்

13. பிரைவேட் ஏ.ஜே.ஆர். பெர்னன்டோ

இத்தாக்குதல் சிங்கள இராணுவத்தை நிலைகுலையச் செய்தது; ''பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவோம்'' எனக் கறுவிய அரசாங்கத்துக்கு மிகுந்த அவமானத்தை விளைவித்தது. இருந்தும் இனவாத அரசாங்கம் இத்தாக்குதற் சம்பவத்தைப் பயன்படுத்தி, தான் ஏற்கனவே திட்டமிட்டு வைத்திருந்த இனப் படுகொலையை தமிழர்கள் மீது கச்சிதமாக கட்டவிழ்த்து விட்டது. ஜுலை 24ல் இருந்து தமிழர்களுக்கு எதிரான வன்செயல்கள் முன்னெப்பொழுதும் கண்டிராத மூர்க்கத்துடன் வெடித்துக் கிளம்பின. இந்த இனவெறி முழக்கங்கள் நாடெங்கும் எதிரொலித்தன. நூற்றுக்கணக் கான தமிழர்கள் எக்காரணமுமின்றி படுகொலை செய்யப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான தமிழ் வீடுகள் எரிக்கப்பட்டன. கொழும்பில் தமிழர் களின் பொருளாதாரத்தளம் முற்றாக அழிக்கப்பட்டது. இத்திட்டம் முழு வதும் இனவாத சிங்கள அமைச்சர்களால் அரசபடைகளின் முழு ஆதரவுடன் அமுல் நடத்தப்பட்டது. •



லெப்டினனட் செல்வநாயகம் (அம்மான் செல்லக்கிளி சந்திரன்)

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive